தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 ஏப்ரல் 3.

பங்குனி 21, ரௌத்திரி-திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

> " பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
> நன்கு செலச்சொல்லா தார் ".

நல் அறிஞர்கள் குழுமியுள்ள அவையின் கீழ், சிறந்த பொருள்களை அவர்கள் உள்ளத்தில் நன்கு பதியுமாறு சொல்ல இயலாதவர்கள், பல அரிய நூல்களைக் கற்றவராயினும், உலகுக்கு பயன் இல்லாதவர்களே ஆவர்.

1. வினாக்கள் - விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 612, 613 இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

சண்முகாநதி நீர்மின் திட்டம் மற்றும் மேட்டூர் அனல் மின் திட்டம்.

***வினா எண் 612 – திரு. ச. அங்குசாமி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சண்முகாநதி நீர்மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்கள் எந்த அளவில் உள்ளன ?

(ஆ) அதுபற்றிய முழு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) சண்முகாநதி நீர்மின் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மைய அரசு செப்டம்பர் 1980 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.